**செய்தி வெளியீடு எண்:363** **நாள் : 22.07.2015**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, சென்னை மயிலாப்பூர், இராஜா அண்ணாமலைபுரம், எண்.1, பசும்பொன் முத்துராமலிங்கம் சாலையில் கட்டப்பட்டு வரும், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலுக்கு சொந்தமான புதிய திருமண மண்டப கட்டுமானப் பணிகளை இன்று 22.07.2015 மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்கள் ஆய்வு செய்தார்.

இந்த புதிய திருமண மண்டபம், திருக்கோயிலுக்கு சொந்தமான சுமார் 44 கிரவுண்ட் 994 சதுர அடியில், நவீன வசதிகளுடன் 56,036 சதுர அடி பரப்பில் கட்டப்பட்டு வருகிறது. இத்திருமண மண்டபத்தில் தரை தளத்தில் சுமார் 22,000 சதுரஅடி பரப்பளவில் 475 இருக்கைகள் கொண்ட உணவருந்தும் அறையும், முதல் தளத்தில் சுமார் 22,000 சதுரஅடி பரப்பளவில் 1,000 இருக்கைகள் கொண்ட திருமண அரங்கும், 5 தங்கும் அறைகளும், இரண்டாவது தளத்தில் சுமார் 12,036 சதுர அடி பரப்பில் 7 தங்கும் அறைகளும் கட்டப்பட்டு வருகின்றன. நவீன திருமண மண்டப கட்டுமானப் பணியில் தரைதளம், முதல் தளம், இரண்டாவது தளத்தில் தங்கும் அறைகள், கார் செல்வதற்கான சாய்தள கான்கிரீட் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் தளத்தில் பூச்சு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கட்டுமானப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று முடிவுபெறும் நிலையில், நவீன திருமண மண்டபத்திற்கு குளிர் சாதன வசதி, மின் வசதி, மின் தூக்கி, ஜெனரேட்டர், பால்ஸ்சீலிங் முதலிய வேலைகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை ரூ.11.482 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றிட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர தேவையான நடவடிக்கைகளையும் விரைவில் செய்து முடித்திட வேண்டுமென அறநிலையத்துறை அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை, ஆணையர் முனைவர்.மா.வீரசண்முகமணி, இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

ஆணையர்,
இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**